முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 798**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.12.2021, ஞாயிற்றுக்கிழமை

1. கந்தமகா சூட்சும குருராஜனே
கலியுகத்தை வெல்லவந்த தவராஜனே
செந்தூரான் என் சக்தியாகவே இந்த உலகினில்
சிவராஜயோக சித்தி கண்ட ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியன் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 19ம் நாள், 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை)
வரமென அரங்கன் தர்மமே
வையகத்தை வழி நடத்தி வருக
3. வருகின்ற அரங்கன் சன்மார்க்கமே
வையகத்தார்க்கு அழியாமை தந்துவர
தருகின்ற அரங்கன் தர்மத்தைக் கொண்டு
தரணியே ஞான யுகமாற்றம் காண இருக்க
4. இருக்கவே அரங்கனை தொடர்ந்து
இந்த உலகத்தார் சரவணச்சுடரேற்றி
கருத்தாக ஆறுமுகன் என் வழிபாட்டை
கட்டாயம் ஞானமாக செய்துவர
5. வருகவே உலகம் பாதுகாப்புப் பெறும்
வறுமை துன்பங்கள் அகன்றோடி
பெருமைமிக்க ஞான உலகமாக
பேருலகம் இனிதே மாற்றம் பெறும்
6. மாற்றத்தை அரங்கன் வழி யான் செய்வதாலே
மக்களே இன்னும் தாமதிக்கா
ஆற்றல்பட அரங்கனை நோக்கி வந்து
ஆறுமுகன் என் மகா மந்திர தீட்சை பெற
7. தீட்சை பெற உலகோருக்கு ஞானபலம்
திடமாகி கலியில் அழியாமை எனும்
மாட்சிமை மிக்க யோகசித்தி அடைந்து
மக்களெல்லாம் ஞானிகளாகி உயர்வுபெறக்கூடும்
8. உயர்வான அரங்கன் வழிகாட்டலே
உலகமாற்றம் செய்து அற்புதம் நிகழ்த்தும்
தயவாக அரங்கன் வழி வாரீர்
தரணியில் ஞானிகளாகி மேல்நிலை பெறுவீர்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—